முருகப்பெருமான் துணை

**மகான் மெய்கண்டதேவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.01.2023, புதன்கிழமை

1. தவபலமிக்க ஆறுமுக ஞானியே
தருமனே ஞான தேசிகனே
அவதாரம் கலியுகம் காத்திட
ஆறுமுகனார் அம்சமாக வந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வள்ளலே உன் பெருமை கூறி
சிந்தைபட சுபகிருது சிலைதிங்கள்
செப்பிட இருபானேழ் திகதி புந்தி வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 27 ம் நாள் 11.01.2023, புதன்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசியை
வழங்குவேன் மெய்கண்டதேவரும்
ஆரவாரம் பகட்டு என்பதில்லா
ஆன்மீக மெய் ஞான வழி அடைய
4. அடைய மெய்கண்ட ஞானி
அரங்கமகானை நோக்கியே
தடையின்றி மக்களெல்லாம் வந்து
தரும ஞானமிக்க தயவு நெறியை
5. தயவுநெறியை ஏற்று இனிதே
தன்னடக்கமோடு ஞானம் பயில
தயவுகளும் மேலவர் வழிகிட்டி
தடைகளின்றி முழுமை காண்கும்
6. காண்குமே முக்குணம் தன்னில்
கருணைமிக்க சாத்வீகமே நிரம்பி
உண்மை வழி விட்டு என்றும் அகலா
உயர்வான செயல்வடிவமாகி
7. ஆகியே ஆணவ மலம்பற்றா
அமைதி சேவை தயவுமாறா
அகிலத்தையே மாற்றும் வண்ணம்
ஆற்றல் மிக்கத் தன்மைபெருகி
8. பெருகியே மெய் ஞானவான்களாக
பேருலகை ஞானவழிக்கு எடுத்து
ஆறுமுகனார் வழிபாட்டுடன் நடத்தும்
ஆளுமை படைக்கும் சக்திகளாக
9. சக்திகளாக மக்கள் பலமுறுவர்
சரணாகதி அரங்கன் வழி
பக்திபட மக்கள் எல்லாம் வர
பாருலகில் மெய்கண்ட ஞானவான்களாகி

10. ஆகியே அரங்கன் அவதார
அனுகூலமாக வழிமொழிந்து
அகிலமதில் ஞானத்தலைமையை
ஆறுமுகனார் ஆசிபட உருவாக்கி

11. உருவாக்கி உண்மைபலம் கொண்ட
உயர்வான ஞான ஆட்சிதனை
பேருலகம் எங்கும் படைப்பர்
புகன்றிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–